




# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 22 11.06.2026





ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## ஸ்வாமி தேஸிகனின் ப்ரதான சதகம்

1. வேதத்தைக்காட்டிலும் உயர்ந்த சாஸ்த்ரமில்லை. கேசவனை காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்பதை கையை உயர்த்தி, இதுவே ஸத்யம் என்று மூன்றுமுறை அறிவிக்கப்படுகிறது.

2. ப்ரதானவிஷயம் : அதிலும் பரம் (உயர்ந்த) அவரம் (தாழ்ந்து) விஷயங்களை விளக்கிக் கூறும் வேதாந்தம் முக்யமானதாகும். ஸர்வவேதாந்தங்களில் “ப்ரஹ்ம” என்ற பதம் உயர்ந்ததாக கூறப்படுகிறது. அது நாராயணனே என்பதறிவது முக்கியமாகும். அவனும் திருவுடன் சேர்ந்திருக்கும் திருமாலே என்பதையும் உணரவேண்டும்.

3. இப்படி ஓதப்படும் வேதங்கள் நான்கிலும் ஓதப்படுவதான "புருஷ ஸூக்தம்" என்ற பகுதி ப்ரதானமாகும் “மஹாபுருஷன். புருஷோத்தமன்" என்று இவனே ஓதப்படுகிறான். இவனே ச்ரிய பதியாவான்: இதை அறிவது ப்ரதானம்.

4. இப்படி மஹாபுருஷனை ஆராதிப்பதற்கு, இருக்கும் மஹாமந்த்ரங்கள், திருவஷ்டாக்ஷரம் எனப்படும் எட்டெழுத்து மந்த்ரம் ப்ரதானமாகும்.

5. இதிலும் இந்த அஷ்டாக்ஷரம், "இதற்கு மேல் எதுவும் என்ற நிலையிருப்பதை புரிந்துகொள்ளுதல் இல்லை" ப்ரதானம்.

6. இந்த மந்திரத்தை உபதேசம் பெற்றபிறகு (ஸமாச்ரயனம்; அல்லது பஞ்சஸம்ஸ்காரம் என்ற சடங்கு நடந்த பிறகு)ஒரு வித்யா ஜன்மம் எடுப்பதாக நினைத்து மந்திரத்தை மாதாவாகவும், உபதேசிக்கும் ஆசார்யனை “பிதா” என்றும் நினைத்து வழிபடுவது ப்ரதானம் (இதில் ஜீவாத்மா மோக்ஷமடையும் கடைசி பிறவி எடுக்கிறான்)

7. இந்த மஹாமந்த்ரத்தில் மூன்று பதங்கள் உள்ளன. அதில் முதல் பதம் ப்ரணவம் எனப்படுகிறது.இதுவே மூலமந்திரத்தின் முக்கிய முதல் அக்ஷரமாகும்.

8. இந்த ஓரெழுத்தில் மூன்று எழுத்துக்களின் சேர்க்கை உள்ளது என்று வேதம் கூறுகிறது (அ+உ+ம) இப்படி பிரிக்கும் போது கிடைக்கும் முதல் எழுத்து "அ" என்பதாகும். இதை பகவான் கீதையில் எழுத்துக்களில் நான் "அ" காரமாக உள்ளேன் என்பதாலும், "அ" என்ற அக்ஷரம் நேராகவே "விஷ்ணு" வை குறிப்பதாலும் இந்த “அ” காரமே பிராதானமானதாகும்.

9. இப்படி எல்லாவிதப் பொருட்களிலும் வியாபித்து செயலாற்றும் தன்மை உள்ள இந்த "அகாரத்தின்" இயற்கை நியதியில் தெரியும் பொருளையும் உணரவேண்டும்.

10. இந்த அக்ஷரத்தில், தாதுவாக (மூலக்கூறாக) பொருள்கள் தரப்பட்டாலும் இதில் பொதிந்து விளங்கும் "ரக்ஷணம்" (காக்கும் தன்மையை) உணர்வது ப்ரதானம். "அ" என்பது காக்கும் கடவுளான விஷ்ணுவையே குறிக்கும் என்பது நிகண்டு, சொல் அகராதிகளில் தெளியலாம்.

11. இங்கு ரக்ஷணத்தன்மையில் பொதிந்திருக்கிற அகாரத்தில். த்வயமந்திரத்தில் கூறப்பட்ட "ஸ்ரீமந்நாராயணின்" பொருளே பொதிந்து கிடக்கிறது என்பதறிவது ப்ரதானம்.

12. இப்படி தத்வங்களை விவரிக்கும் மந்திரங்கள் "அகாரப் பொருளாய் விளங்கும் நாராயணனைப் போற்றுகின்ற "நாராயணனுவாகம்" என்கிற வேதபாகம் ப்ரதானம்.

13. "அஸ்யா மமச சேஷம் ஹி விபூதிருபாத்மிகா" என்று விஷ்வக்ஸேன ஸம்ஹிதையில் பிராட்டிக்கும். பகவானுக்கும் சேர்ந்தே நாம் சேஷர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆகையால் லக்ஷ்மியும். லக்ஷ்மீபதியும் சேர்ந்தே நமக்கு ப்ரதானர்கள் என்பது அறிவது ப்ரதானம்.

14. இப்படி இருவரும் ப்ரதானமானானும், பதிபத்நி இருவரும் சேஷியானதும் இவர்கள் இருவரிடையே லௌகீகமான ந்யாயப்படி பதியே ப்ரதானம் என்பது அறிவது ப்ரதானம். இவனே நாராயணன் என்றறிவது ப்ரதானம்.

15. இவனே பரப்ரஹ்ம். பரதத்வம். பரஞ்ஜோதிஸ், பரமாத்மா. பரதேவதை, பராகதி. பராகாஷ்டை ஸர்வபராயணம், பரமதபஸ் என்று அறியப்படுகிறான் என்று அறிவது ப்ரதானம் இவனே மங்களுக்கெல்லாம் மங்களம்.

16. லோகத்திற்கு முக்யமான தேவர்கள் த்வார சேஷிகள் எனப்படுகிறார். அதாவது அவர் நமக்கு சேஷி அல்லர். அவர்களுக்கும் நாராயணனே சேஷியாகிறான் என்பதை உணர்வது ப்ரதானம்.

17. இப்படி ப்ரணவத்தில் சொல்லப்பட்ட எழுத்தில் கடைசி எழுத்தான மகாரம் ஜீவனுடைய குறிப்பாகும். இதில் அகார, உகார மகாரங்கள் இணைந்திருப்பதாக "உயிராக பரமனும், உடலாக ஜீவனும் இருப்பதை உணர்வது ப்ரதானம்.

18. இந்த ஜீவனுக்கு பின்புலமாய் நின்று. முன்னே ஜீவனே சக்தியுடையவன் போல் தோற்றமளித்தாலும், மறைந்திருக்கும் ஆற்றலான சேஷியே ப்ரதானம் என்று உணர்வது ப்ரதானமாகும்.

19. இந்த சேஷி சேஷ பாவத்தில் இரண்டும் ஸமமாக கூறப்படுவது போல தோன்றினாலும், இந்த ஜீவன் பரமாத்மா இன்றி ஒன்றையும் செய்ய முடியாது என்பதை உணர்தல் ப்ரதானம் இந்த ஜீவன் எந்த விதத்திலும் சுதந்தரமானவன் அல்லன் என்பதை உணர்தல் ப்ரதானமாகும்.

20. இப்படிச் சொல்லுகிறபோது சுதந்திரமுடையவனாக, பரமாத்வை புரிந்துகொள்ளுதல் அவனுடைய விருப்பத்திற்கு உட்பட்டே கார்யமியற்றும் சக்தியை உணர்வது ப்ரதானம்.

